**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.178/2017**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.10.2023 | தந்தை/கணவர் பெயர்: | செல்வராஜ் |
| பெயர்: | விஜயலெட்சுமி (PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 60/2023 |
| தொழில்: | | | |

**குறுக்கு விசாரணை : 09.10.2023**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

சுந்தரமூர்த்தி-சரஸ்வதி தம்பதியனருக்கு 2 மகன்கள், 2 மகள்கள் என்றால் சரிதான். அதில் கணேசன் என்பவர் தான் மூத்தவர் என்றும் இளையவர் ரவிசந்திரன் என்றால் சரிதான். நான் முதல் மகள், 2-ம் வாதி எனது இளைய சகோதரி என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்திற்கான அடிமனை சட்டநாதர் சுவாமி கோயிலுக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். வழக்குரையில் முதல் அயிட்ட சொத்து அப்பாதுரை விலைக்கு பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அப்பாதுரை பெயரில் கிரயம் பெற்றதற்கான அசல் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் ஆவணம் 1-ம் பிரதிவாதியின் வசம் உள்ளது. எனக்கு எழுதப்படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் 04.05.1946-ல் அப்பாதுரை பெயரில் ஏற்பட்ட அசல் கிரய

பத்திரம் என்றால் சரிதான். **அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அப்பாதுரைக்கு பாலகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி, கலியமூர்த்தி மற்றும் சம்பந்தம் ஆகிய 4 மகன்கள் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு இறந்தார். கலியமூர்த்தி எப்போது இறந்தார் என்றால் தற்போதும் உயிருடன் தான் உள்ளார். அவர் எங்கு வசித்து வருகிறார் என்றால் கதவு எண்.1 சி, தெற்கு தெருவில் வசித்து வருகிறார். சம்பந்தம் எங்கு வசித்து வருகிறார் என்றால் அவருடைய பாகத்தை கோயிலுக்காக விற்பனை செய்துவிட்டு திருவிசைநல்லூர் சென்றுவிட்டார். பாலகிருஷ்ணன் அவருடைய பாகத்தை சுந்தரமூர்த்தியிடம் கொடுத்துவிட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

பாலகிருஷ்ணனுக்கு எத்தனை வாரிசு என்றால் ஒரே ஒரு பெண் மட்டும் உள்ளார். அவர் மயிலாடுதுறையில் வசித்து வருகிறார். தாவா முதல் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 416 சதுரடி ஆகும். முதல் அயிட்ட சொத்தை அப்பாதுரையின் வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் அவர்கள் பாகம் பிரித்து கொள்ளவில்லை. தாவா முதல் அயிட்ட சொத்து அப்பாதுரையின் வாரிசுகளின் பெயரில் கூட்டு பட்டாவாக தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் கூட்டு பட்டாவாகும். **அது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அப்பாதுரையின் அனைத்து வாரிசுகளையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

தாவா 2வது அயிட்ட சொத்து ரவிசந்திரன் என்பவரால் சுயமாக கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதனுடைய கிரய பத்திரம் ஏற்கனவே வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது சகோதரர் கணேசன் 1994 ஆம் ஆண்டு இறந்துபோனார். அவரது இறப்பு சான்றை தாக்கல் செய்துள்ளேன். கணேசனின் வாரிசுகள் தான் பிரதிவாதிகள் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் பாகம் கோரி

தாக்கல் செய்துள்ளேன். அதை தவிர வேறு பரிகாரம் கேட்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கணேசன் இறந்த பிறகு ரவிசந்திரன் 1-ம் பிரதிவாதியை 2 வது திருமணம் செய்துகொண்டார் என்றால் இல்லை. ரவிசந்திரனும், 1-ம் பிரதிவாதியும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் இல்லை. ரவிசந்திரன் சர்க்கரை ஆலையில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். ரவிசந்திரனின் இறப்பிற்கு பிறகு ஓய்வூதிய பலனை 1-ம் பிரதிவாதியின் தான் அடைந்து வருகிறார் என்றால் சரிதான், அனுதாபத்தின் பெயரில் 1-ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ரவிசந்திரன் இறந்தபிறகு சுந்தரமூர்த்தியும், சரஸ்வதியும் நாங்கள் தான் வாரிசுகள் என மயிலாடுதுறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.174/2009 ஆக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1-ம் பிரதிவாதியும், சர்க்கரை ஆலை நிர்வாகவும் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் விசாரணைக்கு பிறகு சரஸ்வதியும், பானுமதியும் மட்டுமே ரவிசந்திரனின் வாரிசுகள் என தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

ரவிசந்திரனின் மனைவி என்ற வகையில் தாவா 2 வது அட்டவனை சொத்தையும் 1-ம் பிரதிவாதி அடைந்து கொண்டார் என்றால் சரியல்ல. சுந்தரமூர்த்தி சிங்காரவேலனுக்கு முதல் அயிட்ட சொத்தை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் முதலில் வாதிகளுக்கு உயில் எழுதி கொடுத்து, பின்னிட்டு 2-ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார். எங்கள் பெயரில் எழுதி வைத்த உயில் ஆவணத்தை 17.06.2013-ல் ரத்து செய்துவிட்டு தான் 03.12.2015-ல் சிங்காரவேலனுக்கு உயில் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா முதல் அயிட்ட சொத்தில் நாங்கள் குடியிருந்து வருவதற்கான எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் வைத்துள்ளேன். தாவா முதல் அயிட்ட சொத்தில் உள்ள இரண்டு மின்இணைப்புகளும் சிங்காரவேலன் பெயரில் உள்ளது என்றால் உயிலுக்கு

பிறகு ஏற்பட்டுள்ளது. உயில் எழுதி வைப்பதற்கு முன்பு யார் பெயரில் மின் இணைப்புகள் இருந்தது என்றால் ரவிசந்திரன் பெயரில் இருந்தது. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுந்தரமூர்த்தி வேளாண் துறை அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். அவர் இறப்பிற்கு பிறகு அவருடைய குடும்ப ஒய்வூதியத்தை அவருடைய மனைவி சரஸ்வதி பெற்று வருகிறார் என்றால் சரிதான். சரஸ்வதி இறந்தபிறகு நான் தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறேன்.

நான் தற்போது சீர்காழி பிடாரி தெற்குவீதியில் முருகன் என்பவருக்கு சொந்தமான வீட்டில் வாடகைக்கு வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எந்த காலத்திலும் தாவா முதல் அயிட்ட சொத்தில் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல, அது இடிந்துவிட்டதால் நான் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் பாத்தியப்பட்ட சில தட்டுமுட்டு சாமான்கள் மட்டும் பிரதிவாதிகளின் அனுமதியில் தாவா முதல் அயிட்ட சொத்தில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல.

எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் இறுதியாக எப்போது கருத்துவேறுபாடி ஏற்பட்டது என்றால் 2016 ஆம் ஆண்டு. சொத்து பிரித்து கொள்வது சம்பந்தமாக எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் பேச்சுவார்த்தை நடந்ததா என்றால் நான் கேட்டேன், அவர்கள் கோர்ட்டுக்கு போக சொல்லவிட்டார்கள். எங்களுக்கு எழுதி வைத்த உயில் ரத்து செய்யப்பட்டு சிங்காவேலனுக்கு உயில் எழுதி வைத்த விவரம் எப்போது எங்களுக்கு தெரிய வந்தது என்றால் 2017 ஆம் வருடம். ரவிசந்திரன் என்பவர் தாவா முதல் அயிட்ட சொத்தில் தான் வசித்து இறந்துபோனார் என்றால் சரிதான். ரவிசந்திரனின் இறுதி சடங்குகள் 1-ம் பிரதிவாதி தான் மனைவி ஸ்தானத்தில் செய்தார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.174/2009-ன் பேரில் நான் எவ்வித மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை எனது தாயார் சரஸ்வதி தான் வழக்கு நடத்தி வந்தார். மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். ரவிசந்திரனின்

மனைவி என்ற முறையில் 1-ம் பிரதிவாதி தான் முதல் நிலை வாரிசு என்றும், நாங்கள் இரண்டாம் நிலை வாரிசு என்பதால் ரவிசந்திரனுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. அப்பாதுரையின் அனைத்து வாரிசுகளையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் குறையுற்றுள்ளது என்றால் சரியல்ல. முதல் அயிட்ட சொத்து உயிலின் அடிப்படையில் 2-ம் பிரதிவாதி சிங்காரவேலவுக்கும் 2-ம் அயிட்ட சொத்து ரவிசந்திரனின் மனைவி என்ற முறையில் 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு பாகம் கிடைக்கதக்கதல்ல என்றும் தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.